# <u>Principal District Munsif Court, Sankarankovil.</u>
# <u>OS.No.20/2016</u>

தேதி : 04.04.2025

பி.வா.சா.1 -நவநீதகிருஷ்ணன்

**<u>பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>** :-

நான் இவ்வழக்கின் பிரதிவாதி/எதிர்கோரிக்கை வாதி. நான் ஏற்கனவே பி.வா.சா.1 ஆக முதல்நிலை சாட்சியம் அளித்து பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது

1. 07.10.1947 ல் பெரிய கருப்பன் வகையறா, தர்மலிங்க முதலியாருக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி மேடோபர் ஆவணம் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 05.05.1949 ல் தர்மலிங்க முதலியார் முத்தையா நாடாருக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி மேடோபர் ஆவணம் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. தீர்வை ரசீது தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 27.11.1929 ல் தபசில் சொத்திற்குரிய தாய் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. தபசில் சொத்திற்குரிய பட்டா (பட்டா எண்.2700)ன் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**நான் தாக்கல் செய்துள்ள சாட்சி சான்றாவணங்களை ஏற்று அசல் வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.**

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.